[17th February 1959

SRI A. VEDARATHNAM : வெளி நாடுகளில், குறிப்பாக அமெரிக்கா போன்ற இடங்களில் இருந்து இந்த மாணவர்களுக்கு ஸ்காலர் ஷிப் அந்த நாட்டுச் சர்க்கார் கொடுத்து வருகிறார்கள். நம்முடைய மா நிலத்து மாணவர்கள் அந்தப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு இருக்கிறார்களா? எத்தனை பேர் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அனுப்பப்பட்டிருக்கிறார்கள். எத்தனை பேர் என்ற விவரம் இல்லை.

SRI T. SAMPATH : " மெரிட் " டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : I suppose everything is taken into consideration before selection is made. I suppose these things will generally be given on merit.

Sub-treasury for Vedaranyam

* 417 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டியில் இப்போதுள்ள தாலுகா கஜானா வேறெங்கேனும் மாற்றப்படுமா ?

(ஆ) வேதாரண்யம் சப்-தாலுகாவிற்கு கஜானா வசதி செய்துகொடுக் கும் உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால் அதன் விவரம் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) There is no proposal to transfer the taluk treasury at Tiruturaipundi elsewhere.

(ஆ) & (இ) The proposal whether a separate sub-treasury may be opened at Vedaranyam is under consideration.

SRI A. VEDARATHNAM : வேதாரண்யத்தில் இதற்கு முன் இருந்த கஜானாவை எடுத்த காரணத்தினால் ஏராளமாக பணம் ரிமிட் பண்ணுகிறவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதன் காரணமாக அங்கே ஒரு சப்-டிரஷரியை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா? அதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது தோப்புத்துறை என்ற இடத்தில் கஸ்டம்ஸ் டிரஷரி இருக்கிறது. அதை எடுத்துவிடவேண்டு மென்ற உத்தேசம் இருக்கிறது. அப்போது இந்த இடத்தில் அதை வைக்கலாமா என்ற உத்தேசமும் இருக்கிறது.

Public Works, Irrigation and Food Production departments

* 418 *Q.*—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Public Works, Irrigation and Food Production departments have been amalgamated;

(*b*) whether there is any proposal to constitute a special Public Works Department Division for Tanjore district to provide irrigation facilities for rain-fed areas and to provide drainage facilities in the district; and

(*c*) whether there is any proposal to amalgamate minor irrigation department now under the Revenue Department with the Public Works Department?

17th February 1959]

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir. But, the question of integration of the various engineering branches, viz., Public Works, Highways, Irrigation, Food Production, Minor Irrigation, etc., is under the consideration of the Government.

(*b*) There is no proposal to investigate scheme providing for irrigation facilities to rain-fed areas in the Tanjore district. The question of forming a Special Public Works Department Division for improving the existing drainage facilities is however under consideration.

(*c*) Yes, Sir.

Educational concessions

* 419 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to revise the income limit of parents of students entitled to (i) full-fee concession; and (ii) half-fee concessions?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

Heavy rains in the City

* 420 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR :
SRI N. K. PALANISAMI : } Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of persons rendered homeless in the Madras City and suburbs due to heavy rains on the 19th and 20th November 1958; and

(*b*) the steps taken by the Government to give relief to them?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The number of persons whose dwelling numbering about 6,300 were rendered uninhabitable on account of the heavy rains is 25,800.

(*b*) Temporary accommodation was provided and a survey of the extent of damages was made. An advance amount of Rs. 10,000 was sanctioned in November 1958 to those victims who were in urgent need of relief. It is proposed to sanction a further amount for affording relief to all the victims. The matter is under the consideration of the Government and orders are likely to issue shortly.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த வட்டாரத்தில் வாழக்கூடிய மக்கள் ஒவ்வொரு தடவையும் பெரும் மழை வரும்போது பாதிக்கப்படுகிறார்கள். ஆகையால் நிரந்தரமாக அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது அங்கே ஆட்சேபகரமான இடத்திலே குடிசை போட்டு வருகிறார்கள். அந்த மாதிரியாக போட்டுக்கொள்ள வொட்டாமல் தடுப்பது சிறந்த வழி என்று நினைக்கிறேன்.

SRI N. K. PALANISAMI : இருக்கக்கூடிய சேரிகளில் டிரைனேஜை ஆழம் செய்வது, இன்னும் பள்ளங்களை மேடு செய்வது ஆகியவை மூலமாக இந்த மாதிரி ஏற்படுகிற கஷ்டத்தைத் தவிர்க்க முடியும். அந்த மாதிரி சர்க்கார் செய்யக் கூடாதா?